1979 மார்ச் 27]

பெண்ணாடம் நல்லூர் ஒன்றியம்.

* வினா எண். 550— திரு. எம். பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியைச் சேர்ந்த பெண்ணாடம் நல்லூர் யூனியனாக இருப்பதை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : இராமநாதபுரம் ஏற்கெனவே .... (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 551 ..

திரு. துரை முத்துசாமி : எங்கள் பகுதியை பொறுத்த முன் கேள்வியில் கையைத் தூக்கிக் கொண்டே இருந்தும் கூப்பிடவில்லை. அதிலே துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முத்துசாமி கேள்வி கேட்க அனுமதி கொடுக்க முடியாது. என்னைக் கட்டாயப் படுத்தி துணைக் கேள்விகள் கேட்க முடியாது. எதைப் பேசலாம், எதைப் பேசக் கூடாது என்கிற முறை இருக்கிறது. மிரட்டுகிற வகையில் கேட்கக் கூடாது. முதலில் அதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

விலைவாசி புள்ளி விவரம்

*வினா எண். 551— திரு வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1957 முதல் 1977 வரை விலைவாசி புள்ளி விவரம் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அவை முன் * ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா.....

(குறுக்கீடு— ஐயா என்று கூறலாமா ?)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் நீண்ட கால உறுப்பினர். அவருக்கே தெரிய வேண்டும்.

* 493-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]